1992 ஏப்ரல் 21]

இன்றைக்கு, நாளையிலேயிருந்து தமிழ்நாட்டிற்கும் தெரியக் கூடிய ஒரு செய்தியாக ஆகிவிட்டது. ஆகவே, இதை அரசு நன்கு உணர்ந்து, தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது மட்டும் அல்ல; ஒரு சில பள்ளிகளுக்கு ஆசிரியர் பல நாட்கள் தொடர்ந்தே போகாமல் இருக்கின்ற பள்ளிகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, வால்பாறை தொகுதியில் சிம்கோனா என்ற பகுதியிலே ஒரு பள்ளிக் கூடத்தை ஆரம்பித்திருக்கின்றோம். அங்கே ஆசிரியர்களைப் போட்டால் போவது இல்லை. லீவ் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்குச் சட்டமும் விதியும் இடம் தருகிற காரணத்தால் அவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் அரசு நடத்துவதற்குப் பதிலாகத் தனியாரிடம் விட்டு விடலாமா என்ற யோசனையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் **573.** திரு. து. மூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

573—

சீர்காழியில் அரசு கலைக் கல்லூரி.

*3572—**திரு. து. மூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சீர்காழியில் ஓர் அரசு கலைக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி இல்லாததால் அங்கே கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள் வெகு தொலைவில் சென்று படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் மிகவும் சிரமப்படுகின்ற ஒரு சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இந்த நிலையைப் போக்க அவசியம் அங்கு ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, இப்பொழுது இல்லாவிட்டாலும், இனி வரும் காலங்களில், இனி வரும் ஆண்டிலாவது மறுபரிசீலனை செய்து நம்முடைய

சீர்காழி தொகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலே மட்டுமல்ல; எந்த தொகுதியிலேயும் அரசின் சார்பில கலைக்கல்லூரியை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை. இப்பொழுது இருக்கின்ற நிலைமையிலே, கலைக் கல்லூரி அவசியமில்லை என்றே அரசு கருதுகிறது. அதனாலே, அரசாங்கப் பணத்திலேயிருந்து அப்படியொரு முயற்சி எடுக்க வேண்டியதில்லை என்று நாம் கருதுகிறோம். அவ்வளவு முக்கியமான, அவ்வளவு தேவையான அளவிற்கு இந்தக் கலைக்கல்லூரி படிப்பு இல்லை என்பதையும் அரசு உணர்கிறது. ஆகவே, அரசின் சார்பில் சீர்காழியிலே மட்டுமல்ல, வேறு எந்த ஊரிலேயும் ஆரம்பிக்கிற கருத்துரு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 574. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

574—

ஆரம்ப சுகாதார மையத்தை மருத்துவமனையாக்குதல்.

*1296— **திரு. ச. புரட்சிமணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் நகரில் ஆரம்ப சுகாதார மையத்தில் 21 படுக்கை வசதி செய்து மருத்துவ மனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், பெண்ணாடம் ஆரம்ப சுகாதார மையத்தை 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையாக உயர்த்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இப்பொழுது இல்லை.

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என் தொகுதியில் பெண்ணாடம் நகரம் மிக முக்கிய நகரமாகும். அந்த நகரத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலயத்திற்குச் சுற்று வட்டாரங்களிலிருந்து சுமாராக 30,000 மக்கள் வந்து தினமும் போகிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையம் 21 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையாக மாற்றப்படுமா என அறிய விரும்புகிறேன்.